RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2012

OPEN ACCESS

# சூல் புதினத்தில் உறவும் உறவின் வெளிப்பாடும்

**சி. பவித்ரா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, டாக்டர். எஸ். என். எஸ். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு, இந்தியா.

# Relationship and the Expression of the Relationship in Sool Novel

**S. Pavithra [a, *]**

[a] Department of Tamil, Dr.SNS Rajalakshmi college of Arts and Science (Autonomous), Coimbatore-641049, Tamil Nadu, India

* Corresponding Author: spavithra638@gmail.com

Received: 20-06-2022
Revised: 26-09-2022
Accepted: 13-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Early man lived in the wild society by hunting as animals along with animals. The loss for them in that society is more. Wanting to make up for the loss, the primordial man began to live together in groups to save themselves from danger. This structure is a continuation of the way of life is called ethnic society. Such a way of life is fundamental to the structural origin of the family. It is relationships that keep society alive. The value of relationships that live in harmony is unique. The relationship that results from the noble expression of love is that people are living in harmony with nature by establishing a relationship between themselves and with all the living beings they see as animals, birds, nature and God who are close to them. In every society, though people live in large numbers, they have formed bonds among themselves on the basis of social structures such as caste, religion, race, language, etc., and are divided into groups. The village is the foremost in connecting the individual to relationships. Such group life is called the region. In this, individual guidelines and social guidelines modulate human life. The purpose of this study is to bring out the importance of the relationship of the agricultural people of karisal through the novel by presenting the purpose of studying the fact that when the lives of people living in the region are viewed in terms of the value of "human relationship with nature", their lives are in union with nature.

**Keywords:** Sool, Nature, Karisal Land, Relationship

## முன்னுரை

தனிமனிதர்களைச் சமூகக் குழுக்களாக ஒழுங்குப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைவது உறவுமுறை. சமூகத்தை உருவாக்குவதற்கு இன்றியமையாதது மனித உறவு. மானிட உறவு என்பது உறவுப் பெயர் நிலையில் மட்டும் அமையாமல் ஒருவர் இன்னொருவருக்கு செய்யும் உதவியின் பொருட்டும் அவர் காட்டும் அன்பு, பரிவு போன்றவற்றாலும் அமையும். தமிழ் இலக்கிய வரலாற்றில் பண்டு தொட்டு இன்றுவரை உறவுகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. அத்தகு உறவுமுறைகள் தற்கால இலக்கியத்தில் வெளிப்பட்டு நிற்பதின் நோக்கத்தை ஆய்வு செய்வதன் மூலமாக உறவுகளின் முக்கியத்துவத்தையும், அதன் அவசியத்தையும் இன்றைய சமூகத்திற்கு அறியச் செய்வது கட்டாயமாகிறது. அதன் அடிப்படையில் உறவுகளைச் சூல் புதினத்தின் வழி ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## உறவுகள்

உறவு என்பது தொடர்பு எனப் பொருள்படும். ஒரு மனிதரோடு மற்றொரு மனிதருக்கு ஏற்படும் தொடர்பு உறவின் முதல்படியாகும். கணவன், மனைவி, குழந்தை சேர்ந்த குடும்பம் உறவின் ஆரம்பம். உற்றார், உறவினர் சமூகத்துடன் தொடர்பில் உள்ளோர் உறவின் தொடர்ச்சிநிலை. "பலர் கூட்டமாக சேர்ந்து வாழும் சமுதாய இயல்பு மனிதனுக்கு மட்டும் உரித்தன்று மனிதனின் நேர் மூதாதையர்களான மேல்நிலை உயர் பாலுட்டிகளிடமும், உயர் பாலுட்டிகளுக்கு கீழ் நிலை உயர் பாலுட்டிகளிடம் இப்பண்பு சற்று குறைவாகக் காணப்படுகிறது" என்று ஆசிரியர் உறவுகள் பற்றிய தம் கருத்தினைப் பதிவு செய்கிறார் (Bhakthavatsala Bharathi, 2003). இதன்வழி உறவு என்பது உயர்திணை, அஃறினண, இயற்கை என அனைத்து உயிர்களிடத்தும் காணப்படுகிறது. உறவு இல்லா உயிரினம் கிடையாது எனபது இக்கூற்றின்வழி வெளிப்படுகின்றது.

## மானுடர்களுக்கிடையேயான உறவு

குழந்தை பிறக்கும்போது தாய், தந்தை தாய்வழி உறவினர், தந்தைவழி உறவினர் என்னும் குடும்ப அமைப்பானது, அக்குழந்தை வளர்ந்து திருமணம் செய்யும்போது தனது துணைவர்களின் வழியிலும், தங்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் வழியிலும் உறவு விரிவடைகின்றது. இத்தகைய மனித உறவுகளில் ஒருவருக்கொருவர் தரும் முக்கியத்துவம் ஆற்றும் பங்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது.

## கணவன் மனைவி உறவு

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் வாழ்க்கை ஒப்பந்தம். "மனித இனம் தன், பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துக்கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும்" என திருமணத்திற்கு விளக்கம் தருகிறார் (Bhakthavatsala Bharathi, 2003). இதன்வழி சமூகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு தங்களது வாழ்வை ஓர் குடும்பமாக வாழ்வதற்கு பலர் அறியச் செய்துக்கொள்ளும் நிகழ்ச்சி மணஉறவாக வெளிப்படுகின்றது. இந்த மணவாழ்வின் வழியே கணவன் மனைவி உறவு உருவாகின்றது. இதனை,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

இல்வாழ்விற்கு தகுந்த சிறந்த பண்பு உடையவளாகித் தன்னை மணந்தவனின் வளமைக்குத் தகுந்தபடி நடப்பவளே சிறந்த வாழ்க்கைத் துணைவியாவாள். என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தன் கணவனின் வளமைக்காகத் தன் வாழ்வினை மாற்றியமைத்த மனைவியின் அன்பின் மகத்துவத்தை இப்புதினத்தின்வழி ஆசிரியர் பதிவு செய்துள்ளார் (Parimelzhagar, 2002).

எந்தக் காலக்கட்டத்திலும் பெண் தன் திருமண உறவினை மற்ற பெண்ணுக்கு விட்டுக்கொடுப்பதென்பது கடினமான செயல், இருப்பினும் இப்புதினத்தில் வரும் கொப்புளாயி எனும் பெண் தன்னிடம் உள்ள குறையினால் தன் கணவனுக்கு மறுமணம் செய்துவைப்பதாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார். "கல்யாணமாகி குழந்தைபாக்கியம் கிடைக்கவில்லை என்றவுடன் இரண்டாம் தாரத்திற்கு வழி விட்டு ஒதுங்கிக்கொண்டதோடு தன் வாழ்க்கையையே மாற்றிக்கொண்டாள்" (Dharman, 2021). தன் உடன் பிறந்த சகோதரியையே தன் கணவனுக்கு மறுமணம் செய்துவைத்து இரு மனைவியருடன் ஒற்றுமையாக வாழ்வதன் வழி திருமண உறவிற்குள் உள்ள உறவின் புரிதல் புலப்படுகின்றது.

## தந்தை மகள் உறவு

தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கு மட்டுமல்ல தனது பிள்ளைகனைத் தன் இதயத்தில் சுமக்கும் ஒவ்வொரு தந்தைக்கும் அஃது உரித்தானதேயாகும். அன்பும் அன்பு சார்ந்த இடமும் உண்டெனில் அது தந்தையின் இதயமாகும். மகள் திருமணம் முன்பே தன்னை ஒருவனிடம் இழந்து, தன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தந்தை யாரென நிரூபிக்க இயலாத சூழலில், அப்பெண்ணின் தந்தை எடுக்கும் முடிவினை உணர்வு புர்வமாக ஆசிரியர் புதினத்தில் பதிவு செய்துள்ளார். "மாதாயி நான் பெத்த புள்ளதான சாமி, அதே மாதிரி அவ பெத்துக்குடுக்குற புள்ளைக்கு அப்பன் வேணும்னா யாருனு தெரியாம இருக்கலாம், தாத்தா நான்தானசாமி. அத மாத்த முடியுமா, பேரனோ பேத்தியோ நான் வளர்க்கஞ் சாமி" (Dharman, 2021). இதன்வழி தந்தையின் அன்பு புலப்படுகின்றது. தற்போதைய காலக்கட்டத்திலும் சில இடங்களில் சாதிபாகுபாட்டினால் மாற்று சாதியினரை திருமணம் செய்த தான் பெற்ற பிள்ளைகளைக் கௌரவ கொலை செய்யும் நிகழ்வுகள் அரங்கேரிவரும் நிலையில், திருமணத்திற்கு முன் ஒருவனால் ஏமாற்றப்பட்டு கற்பம் தரித்த தன் மகளைப் பிறர்முன் விட்டுக்கொடுக்காமல் தன் மகளுக்கும் பெறவிருக்கும் குழந்தைக்கும் அடைக்கலம் தந்து பேணுவதன்வழி தந்தை மகள் உறவின் மகத்துவம் விளங்குகின்றது.

## சமூக உறவு

ஓரிடத்தில் வாழும் மக்களிடையே வேறு எந்தவொரு ஒப்பந்த பினணப்பும் இல்லாமல், ஒரு குழுவைச் சேர்ந்த மக்கள் தங்களுடன் இருப்போரின் தேவைகள் சுகதுக்கங்களில் பங்குகொண்டு வாழும் உறவு சமூக உறவுமுறையாக அமைகின்றது. இப்புதினத்தில் ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட கொடுமைக்கு ஊர் மக்கள் கூடி துணை நிற்பதைப் பதிவு செய்துள்ளார். "நம்ம ஊருக்குள்ள வந்ததுமில்லாம பொம்பளைய கெடுக்கப் பாத்திருக்கான். அதோட போய்ட்டாலும் விட்றலாம், நம்ம ஊரு பய துருத்தன் மண்டைய ஒடச்சு ரத்தக் குறியும் காட்டிட்டான். பயல, சும்மா விடலாமா? பதிலுக்க ரத்தக்குறி காட்லனா மத்த ஊர்க்காரன் நமக்கு உடுத்திக்கோ அப்பிடினு சேல எடுத்துக் குடுத்திருவான்" (Dharman, 2021). இதன்வழி தன் சமூகத்தைச் சேர்ந்த உறவில்லாத ஒருவருக்காக துணை நிற்கும் போக்கானது, மக்களிடையே ஒப்பந்தமில்லாத ஓர் மனித அன்பின் வெளிப்பாடுநிலைப்படுவதை அறிய முடிகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் நம்முடைய சகோதர சகோதரிகளே, அது போன்று உலகில் உள்ள அனைத்து ஊர்களும் நமக்கு சொந்தமானது என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே மனித வாழ்வின் ஒற்றுமையை தெளிவாக நம் உலகிற்கு எடுத்துக்காட்டி சென்றுள்ளார் கணியன் புங்குன்றனார். இக்கூற்றிற்கு ஏற்ப சூல் புதினத்தில் வரும் கொப்புளாயி தன்னைச் சுற்றியுள்ள மக்களை தன் கருனை உள்ளத்தினால் தன் உறவினர்போல் கருதி சேவை செய்யும் செயல் சிறந்த பண்பாக வெளிப்படுகிறது.

மேலும், ஒரு தனி மனிதர் தனக்கு உறவில்லாத தன்னைச் சுற்றியுள்ளோரின் நலனுக்காச் செய்யும் சேவையின்வழி மக்களிடத்து பிணைப்பை ஏற்படுத்துகின்றது. இக்கதையில் கொப்புளாயி செய்யும் சேவையினைப் பதிவு செய்துள்ளார். "கௌாப்புளாயி சந்தோசம் பொங்க மோர் சுமந்தாள். வெள்ளிதோரும் மக்களின் மனங்களில் நிறைந்தாள். தன்னை, மறந்து இளைப்பாரி ஆசுவாசபடுத்தி வயிறு நிறைய தயிரைப்போல் கெட்டி மோர் குடித்து கையெடுத்துக் கும்பிட்டுச்செல்லும் ஜனக்கூட்டம்." (Dharman, 2021).

மேலும் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு இளைப்பார தான் நட்டுவைத்த மரங்களும் பெரும் உதவியாக இருந்தது. இவற்றைப் பெற்ற மக்கள் "தேடிவந்து திருநீரும் குங்குமமும் வெள்ளரிப்பிஞ்சும் கொப்புளாயின் வீட்டில் நிறைந்துவிட்டன" (Dharman, 2021). இப்புதினத்தில் ஒருவர்செய்த சேவையால் அதை பெற்ற மக்களும், தங்களின் அன்பினைப் பரிமாறுகின்றனர். இதன்வழி சமூகத்தின் ஒப்பந்தமில்லாபிணைப்பு புலப்படுகின்றது.

## முதலாளி வேலையால் உறவு

தொழிலாளி தன் உழைப்பைக் கொடுத்து பணி செய்கிறார். முதலாளி தன் தொழிலாளியின் உழைப்பைப் பெற்று அதற்கான ஊதியத்தைக் கொடுக்கிறார். இவர்களுக்கிடையேயான உறவானது வேலையைத் தாண்டி நிற்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். கிராமப்புறங்களில் உள்ள சம்சாரிகளின் நிலத்தில் வேலை செய்வதற்காக, ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு வருடத்திற்கு ஒப்பந்த முறையில் பிரிக்கப்படுவர். வேளையாட்கள் நாற்றுநடல் தொடங்கி அறுவடை முடியும்வரை, வேலைசார்ந்து மட்டுமல்லாது தங்களின் வீட்டின் சேவைகளிலும் பங்கெடுப்பவர்களாக இருப்பர். "ஒவ்வொரு சக்கிலியனுக்கும் குறைந்தது பத்து சம்சாரி வீடுகள்வரை கிடைக்கும் அந்த பத்து வீடுகளில் நடக்கும் களத்து வேளை செய்வது அவர்களின் வீடுகளில் நடக்கும் நல்லது பொல்லாதுகளில் பங்கெடுப்பது, அதேபோல் தன்னுடைய வீட்டில் நடக்கும் நல்லது பொல்லாதுகளில் சம்சாரிகள் உதவுவது, ஒரு வருடம் கழித்து காணிகள் மாறிவிடும்" (Dharman, 2021).

இதன்வழி சம்சாரிகளின் வீடுகளில் தொழில் சார்ந்து கொண்ட பிணைப்பானது தொழிலைத் தாண்டி சொந்த காரியங்களிலும் உடனிருக்கும் ஒரு உறவாக இருப்பதை அறியமுடிகிறது. மேலும், தன் நிலத்தில் உழைப்பவர்களுக்காச் சம்சாரிகள் காட்டும் அன்பினைப் பதிவு செய்துள்ளார். "குப்பாண்டி குடும்பன் காணிக்காரனைக் கூப்பிட்டு உனக்கு வேண்டியதை அள்ளிக்கொள் என்று சொல்லிவிட்டு காணிக்காரண் அள்ளுவதை சிரித்தபடி பார்த்துக்கொண்டு நிற்பான்" (Dharman, 2021). இதன்வழி தன்னிடம் வேலை செய்வோரின் மீது முதலாளிகள் கொண்டுள்ள அன்பு வெளிப்படுகின்றது.

மேலும், கிராமங்களில் சாதி அடிப்படையில் வேற்றுமை காணும் வழக்கம் தற்போதுவரை காணமுடிகின்றது. இத்தகைய காலக்கட்டத்திலும் எவ்வளவு எதிர்வினைகள் இருந்தாலும் இருவேறு சாதிகளிடையே உள்ள உறவை பாதுகாப்பவர்களும் உள்ளனர் என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இங்கு தன் மகன் சாதிவேறுபாட்டால் செய்த தவறான செயலுக்கு வருந்தும் தந்தையின் நிலையினை "அடேய் மடைக்குடும்பா உங்க ஊரு ஜனங்கக்கிட்ட சொல்லிருடா, என்னைய எதுவும் தப்பா நெனச்சிக்கிற வேண்டாம்னு. பய யாரு சொல்லையும் கேக்க மாட்டேங்கான். தெக்கூறு வடக்கூறுக்குள்ள இது தேவையா" (Dharman, 2021). சம்சாரி ஒருவர் இரு ஊர்களுக்கிடையே உள்ள உறவில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க எடுக்கும் முயற்சிகளின்வழி, இரு வேறு சாதியினரிடையே மக்கள்கொண்டுள்ள உறவு புலப்படுகின்றது.

## கடவுள்- மனிதன் உறவு

பக்தி இலக்கியங்களில் இறைவனைத் தன் அடியார்கள் மகன்மை, தலைவன், தலைவி, தோழர் என பல்வேறு உறவுமுறைகளின்வழி தங்களின் அன்பினை வெளிப்படுத்தியுள்ளனர். இயற்கையோடு இயைந்து தொடங்கிய மனித வாழ்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்திருப்பதைப்போல, நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய வழிபாடும் வளர்ந்து வந்துள்ளது. "தெய்வ வணக்கத்திற்கு காரணம் அச்சமும், அன்பும் ஆதிகுடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, புகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும் காரணம் உலகின்கண் உலவும் கணக்கற்ற ஆவிகள் என நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றை தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர்" (Sanmugasundram, 2014).

இக்கூற்றின்வழி நாட்டுப்புற மக்கள் தங்களின் முன்னோர்கள், தங்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவனவற்றை வணங்கினர் என்பதை அறிய முடிகின்றது. இதனை சூல் புதினத்தில் அவவூரிலுள்ள மக்கள் தங்களை, அச்சம்தரும் இயற்கை சீற்றங்களிலிருந்தும், தீய ஆவிகளிடமிருந்தும் தங்களின் வழிபடும் காவல் தெய்வமான ஐயனார் காப்பதாக மக்கள் நம்புவதாகப் பதிவு செய்துள்ளார்.

மக்களின் முக்கியத் தொழிலான வேளாண்மைக்காக நடவு முடிந்ததும் மடைத் திறப்பது வழக்கம். மாறாக மடையில் தண்ணீர் பாயாததால் மனிதன் தன்னைக் காக்கும் தெய்வத்துடன் தன்

நிலைக்காக உரிமையுடன் உரையாடுவதாகப் பதிவு செய்துள்ளார். "அய்யனாரய்யா, நெற சூலியா நிக்கிற இந்தக் கண்மாய்க் கரையில் ஒரு கோடு விழுந்தாலும் போச்சி, மறு நிமிஷமே கோடு ஓடையா மாறி ஒரு சொட்டு தண்ணியில்லாம ஓடி வெறுங்கண்மாயா போயிரும்" (Dharman, 2021).

தன் துயரினை முறையிட்டு அதற்கான தீர்வு கிடைக்கும்வரை கோவிலைவிட்டு செல்வதில்லை என சண்டையிடும் அளவிற்கு இறைவனுடன் நெருங்கி மக்கள் வாழ்வதை இங்கு காணமுடிகிறது. ஊரினைக் காப்பது ஐயனாரின் கடமை என மக்கள் தங்களின் ஒவ்வொரு நிலையிலும் நம்பினர். இதில் மக்களுக்கு நம்பிக்கையோடு கூடிய உறவு கிடைப்பதாக எண்ணுதல் உறவிற்கு மிகப்பெரிய பாலமாக அமைகின்றது.

## மனிதன் அஃறிணைகளுடனான உறவு

"காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்

கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்னும் பாரதியாரின் பாடல்வழி அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் ஒற்றுமை உணர்வினைக் காணமுடிகிறது (Bharathiyar, 2010). அவ்வகையில், மனிதன் தான் விரும்பும் உயர்திணை அஃறிணை என தனக்கு நெருங்கியவற்றிடம் அன்பினால் ஏற்படுத்திய பிணைப்பே உறவின் ஆரம்பமாகும். மனிதன் தான் வளர்க்கும் உயிரினங்கள், தாவரங்கள் போன்றவற்றுடன் நெருங்கி பழகும்போது அதன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் பெருகின்றான். உயிரினங்களும் மனிதனின் மொழியைப் புரிந்து கொண்டு அதன்படி செயல்படுகின்றது.

## கால்நடைகளுடனான உறவு

விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கும் உருளைக்குடி மக்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளைத் தங்கள் வீட்டின் ஒரு உறுப்பினராக் கருதி அன்புடன் வளர்த்து வந்துள்ளனர். "சரி நேரமாச்சி அப்படியே கஞ்சிய குடிச்சிட்டு ஒரேயடியா வீட்டுக்கு பத்திருவம். அதுவும் சரிதா அப்ப மாட்ட அவுக்க வேண்டாமா என்னடா கேள்வி அதுக்கும் நமக்கு மாதிரி வகுரு பசிக்காதா" (Dharman, 2021). வேலைமுடித்து கால்நடைகளை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோகும் இம்மக்கள், இவைகளின் பசி தாகம் போன்ற உணர்வுகளைப்புரிந்து அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்து தங்களின் பிள்ளைகளைப் போல் வளர்த்து வருவது புலப்படுகின்றது.

மேலும், உழவுக்குப் பயன்படும் காளை மாடுகளின் கால்களில் குளம்புகள் தேய்ந்து புண் ஏற்படாமல் இருக்க லாடம் கட்டுவது நடைமுறை. தலைமுறையாக இத்தொழிலைச் செய்துவரும் கொல்ஆசாரி மாடுகளுடன் கொண்ட உறவினை வெளிப்படுத்துமிடத்து "என்ன மந்திரம்டா வச்சிருக்காரு இந்த சண்முகனாசாரி பாரேன் வரும்போது அதாளி போட்டு கொம்பு மண்ணு வாரி அழிச்சாட்டம் பண்ணிச்சு இப்ப பாரு ஆசாரி முதுகுல தொட்டதுதான் தாம்சம் சொதக்னு தரையில படுத்து கால நீட்டிருச்சி" (Dharman, 2021). இதன்வழி மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் உள்ள பாசப்பிணைப்பினைக் காணமுடிகிறது.

மக்கள் தங்களின் நலனிற்காக இறைவன் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக சில சடங்குகளைச் செய்வர். அதேபோல் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளின் நலன் வேண்டியும் கிராமப்புறங்களில் சடங்குகள் செய்வதைக் காணமுடிகின்றது. "சுற்று கிராமங்களிலும் ஆடு மாடுகள் ஈன்றால் அதன் நஞ்சுக்கொடிகளை ஓலைப்பெட்டிக்குள் வைத்துக் கொண்டுவந்து, இந்த மரத்தில் கட்டி வைத்துவிடுவார்கள். ஈன்ற கால்நடைகளின் சுகத்திற்கும், கன்றுகளின் வளர்ச்சிக்கும், பால் வற்றாமல் இருக்கவும் இந்த நேமிக்கம் (Dharman, 2021).

மானிடர்களில் தாய் குழந்தையைப் பெற்றெடுத்தப்பின், தாயின் தொப்புல்கொடியைக் குழந்தையின் நலன் கருதி சேகரித்தனர். அதைப்போல் கால்நடைகளின் நஞ்சுக்கொடியை பராமரித்தனர் என்பதன்வழி கால்நடைகளுடன் மக்கள் கொண்ட பிணைப்பு புலப்படுகின்றது.

குழந்தைப்பேறு என்பது ஒரு பெண்ணின் வாழ்வின் அர்த்தமாக காணப்படுகின்றது. அத்தகைய பேறு கிடைக்காத பெண், தான் காணும் மற்ற உயிருள்ள உயிரற்ற பொருட்களிடத்தில் தன் தாய்மை அன்பை வெளிப்படுத்துவாள். இதனை, சூல் புதினத்தில் வரும் கொப்புளாயி என்னும் பாத்திரன்தின்வழி வெளிப்படுத்தியுள்ளார். “மல்லரிகளா போதும்டி குளிச்சி கும்மரிச்சம் போட்டது எந்திரிச்சி வாங்கடிகளா வீட்டுக்கு போவம் பாரு அந்த கூடுகொம்பு தலைய தண்ணிக்குள்ள ஓட்டி ஓட்டி எடுக்கியே பலபட்ட வீட்டுக்கு போவம்பகிற நெனப்பு இருக்கா பாரன்” (Dharman, 2021). மாடுகளுக்கு தாயாகிப் போனால் தன் கால்நடைகளுடன் பேசும் கலையைக் கற்றுக்கொண்டால். தன் இன்பத்துன்பங்களைப் பகிர்வதற்கும், தன் அன்பினைப் பொழிவதற்கும் தன் கால்நடைகளையே உறவாக எண்ணி வாழ்ந்தால். இதன்வழி கால்நடைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமும் மனித உயிர்களுக்கும் பிற உயிர்களுக்குமான பிணைப்பும்உணர்த்தப்பபடுகின்றது.

## பறவைகளுடனான மனித உறவு

பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான உறவென்பது நாகரீக வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிடத்தக்கதாக இருந்து வந்துள்ளது. அரசர்கள் காலத்தில் சில பறவைகளை உளவு பார்க்க பயன்படுத்தினர். அரசுச் செய்திகளை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு கொண்டு சென்றன புறாக்களும் பருந்துகளும்.

பறவைகள் மனித இனத்திற்கான மரங்களின் விதைகளைப் பரப்பும் செயலைச் மேற்கொள்கின்றன. இத்தகைய பறவைகளுக்கு தேவையான உணவைக் கொடுப்பது மனிதர்களின் கடமையாக எண்ணி உருளைக்குடி கிராம மக்கள் செயல்பட்டு வந்தனர். “உருளைக்குடியை ஒட்டி கொஞ்ச துரத்திலேயே மொட்ட பாறை. எந்நேரமும் அவித்த நெல்லும், குருதவாலியும், தானியங்களும் காய்ந்துக்கொண்டிருக்கும். பறவைகளுக்கு தன் கைவிரித்து உணவளிக்கும் மொட்டபாறை. காவலுக்கு யாரும் இருக்கமாட்டார்கள். எவ்வளவு பறவைகள் வந்து காயும் தானியங்களைத் தின்றாலும், யாரும் பறவைகளை விரட்டக்கூடாது. தலைமுறையாகத் தொடரும் இப்பழக்கம் அவ்வூரில் பயமின்றிப் பறவைகள் வாசம் செய்ய வழிவகுத்துவிட்டது” (Dharman, 2021).

காக்கைகள், மைனாக்கள், புறாக்கள் கூட்டக்கூட்டமாக தங்கிக்கொண்டன. கூடவே மயில்களின் கூட்டமும் ஊரில் மக்கள் பறவைகளை விரட்டாததால் நாளடைவில் பறவைகளும் ஊர் மக்களைப் போல் மாறிபோயிருந்தன. இக்கதையில் மிலுத்தன் மாடத்தி தம்பதியர் பறவைகளுக்கு பெற்றோர்கள்போல் செயல்பட்டு உணவு வைக்க ஒருநாளும் தவறியதில்லை. இச்செயல்வழி பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவினையும் உருளைக்குடி கிராமத்தின் தானியச் செழிப்பையும் அறியமுடிகின்றது.

## தாவரங்களுக்கும் மனிதர்களுக்குமிடையேயான உறவு

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவை சங்க இலக்கியத்தில் நற்றிணைப் பாடல் ஒன்றில் பதிவு செய்துள்ளனர்.

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி

மறந்தனம் துறந்த காழ்முளை அகைய

நெய் மெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப

நும்மினும் சிறந்தன்று நுவ்வை ஆகும் என்று

அன்னை கூறினல் புன்னையது நலனே"

தலைவியின் அன்னை சிறு வயதில் விளையாட்டாகவிதைத்த செடி முளைக்க அதை பராமரித்து வளர்த்த மரத்திற்கு தாயானால். அதனால் அப்புன்னைமரம் தலைவிக்கு தமக்கை முறையானது. என சங்கப்பாடல் மரத்துடன் கொண்ட உறவுமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது (Sanmugasundram, 2014).

இக்கதையில் வரும் கொப்புளாயி என்னும் காதபாத்திரம் கால்நடைகள், பறவைகளுக்கு அடைக்களம் கொடுத்து அன்புடன் வளர்ததைப்போல மரங்களையும் நேசித்து வந்தாள். "இந்த நந்தவனமும் அதுல இருக்கிற மரம் செடி கொடிகளும் என்னோட புள்ளைங்கதா நிய்யி ஊரவிட்டு போகாம இங்கயே இருந்தா ஒங்கிட்ட ஒப்படச்சிட்டு நிம்மதியா கண்ண மூடுவன்" (Dharman, 2021). இதன்வழி மரம் செடிகளை விதை போட்டதுமுதல் வளர்த்து ஆளாக்கியதால் கொப்புளாயி நந்தவனத்தையே உருவாக்கி பராமரித்து இவற்றிற்கு தாயாகவே இருப்பது வெளிப்படுகின்றது (Dharman, 2021).

## முடிவுரை

அன்றாட இப்புவிதன்னில் வாழும் ஒவ்வொரு உயிர்களுக்கும் உறவுகள் இன்றியமையாததாகும். மானுட வாழ்வில் உறவின் மகத்துவம், செயல்பாடுகளை இலக்கியங்களும் எடுத்தியம்ப மறந்ததில்லை. அந்த வகையில் கரிசல் வட்டார மக்களின் உறவு நிலைகளை சூல் புதினத்தின் வழி எடுத்துக்காட்டியமையை இக்கட்டுரையின்வழி அறிய முடிகின்றது. கரிசல் வட்டார உருளைக்குடி கிராமத்தில் வேளாண் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் உறவுகளோடு ஒன்றி இருந்தமையை அறிந்துகொள்ள முடிகின்றது. இயற்கை, கால்நடை, தங்களைக் காக்கும் இறைவன் அத்தோடு தங்களுடன் சமூகத்தில் வாழும் மக்கள் இவற்றினிடத்து கொண்டுள்ள உறவினை எதார்த்தமான போக்கோடு சூல் புதினம் பதிவு செய்துள்ளமை சிறப்பிற்குரியது. இன்றைய சமூக சூழலில் மனிதனை மனிதநேயத்தோடு சிந்திக்கவைப்பதில் உறவுகளுக்கு முக்கிய பங்கு உண்டு. இதனைத் தமது இலக்கியங்கள் மூலம் உணரச் செய்துள்ளார் ஆசிரியர் சோ. தர்மன். சூல் புதினத்தின் வழி ஒவ்வொரு உறவுகளுக்கிடையிலான பிணைப்பு தெளிவுபட எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## References

Bhakthavatsala Bharathi, (2003) Panpattu Manidaviyal, Meiyppan Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2010) Bharathiyar Kavithaikal, Meiyappan Pathippagam, Chennai, India.

Dharman, S. (2021) Sool, Adaiyalam Veeliyeedu, Trichy, India.

Parimelzhagar, (2002) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Sanmugasundram, S. (2013) Nattupuraeyal, Kavya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License